# கலித்தொகை காட்டும் சமுதாய வாழ்வு

**வீ.ராஜேஸ்வரி**
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர், புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

மனிதன் சமுதாயத்தோடு இணைந்து வாழ்கிறான். அந்தஅந்தக் காலக்கட்டத்திற்கு ஏற்ப மாறியும் வளர்ந்தும் வருகிறான். சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் சில மரபுகளைப் பின்பற்றி வாழ்ந்தனர் என்பதை, சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இலக்கியங்களில் சமுதாய உண்மைகள் எண்ணற்றவை பொதிந்து காணப்படுகின்றன. சமுதாய மாற்றத்திற்கு இலக்கியங்களின் பங்களிப்பு முக்கியவத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. அகஇலக்கியங்கள் மனித வாழ்வின் சிறந்த அமைப்பபாகத் திகழ்கிறது. இதனடிப்படையில் கலித்தொகையில் கூறப்படும் சமுதாய வாழ்வு பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

## நிலமும் வாழ்வும்

பண்டைய காலச் சமுதாய வாழ்க்கை முறையானது மக்கள் வாழ்ந்துகொண்டிருந்த நிலப்பரப்பின் இயல்பினை ஒட்டியதாகவே அமைந்திருந்தது. அவ்வகையில் தமிழகத்தில் குறிஞ்சி முதலான ஐவகை நிலமும் அந்நிலத்திற்கேற்றவகையில் இயங்கிய வாழ்க்கைச் சூழலையும் எடுத்துரைப்பதாகவே கலித்தொகை அமைந்துள்ளது. இவ்வாழ்வின் சிறப்பு ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் இரண்டு வட்டங்களிலேயே சுற்றிக்கொண்டு இருக்கின்றது. ஒன்று அகம், மற்றொன்று புறம். இதில் அகவாழ்வு களவு, கற்பு என்ற நிலைகளில் இயங்குகின்றது. ஆண், பெண் என்கிற பேதம் உயர்வு, தாழ்வு இவைகள் மறைந்து ஆணும் பெண்ணும் நீயும் நானும் என்னும் சமதர்ம மேலாண்மையில் அன்பின் அரசு நடைபெற வேண்டிய தர்மத்தை உணர்த்துவதுதான் அகம் ஆகும். இத்தகைய இல்லற தர்மம் உணர்ந்து நடைபெற்ற அகவாழ்வில் அன்பு மட்டுமே கோலோச்சும் அழகினை, பொருள் செல்வத்தினையும், பிற எண்ணங்களையும் நீக்கி அன்புடைய இருவர் ஓர் ஆடையே உடுக்க உள்ளது என்பதான நிலையிலும் மாறுபட்ட எண்ணமின்றி வாழ வேண்டும் என்பதான அழகிய வாழ்க்கை முறையினை வாழ்ந்தனர். இதனை,

> **"இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்**
> **வளமை விழைதக்கது உண்டோ? உளநாள்**
> **ஓரோ ஓகை தம்முள் தழீஇ ஓரோஓகை**
> **ஒன்றன் கூறாடை உடுப்பவரே ஆயினும்**
> **ஒன்றினார் வாழ்க்கையை"** **(பா.கலி.18)**

என்ற கலித்தொகைப் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றது. இன்றைக்கு சின்னச்சின்ன மனச்சிதைவால் சிதைந்து கொண்டிருக்கக்கூடிய இல்லறத்திற்கு நல்லதொரு நல்லறம் அமைந்துள்ளதனை உணர முடிகிறது.

**அரசன்**

ஓர் அரசனுக்குரிய தொழில் போரிடுதல், நாட்டு மக்களைக் காத்தல், பகைவேந்தனோடு போரிட்டு வெற்றி பெற்ற பின்னர், பகைவேந்தனின் ஊரையும் நிலத்தையும் தீப்படுத்தும் வழக்கம் இருந்ததைப் பாலைக்கலி மூலம் அறியலாம். அரசன் பகைவர் நாட்டைவென்றால் மட்டும் போதாது. சில நாள் அங்கிருந்து காத்தலைச் செய்தல் வேண்டும். மேலும் வெற்றிபெற்ற நாட்டில் இருந்து திரண்ட பொருள்களைக் கைக்கொள்ளுதல் அரச மரபாகும். வேந்தன் பகைவன் நாட்டின் மீது போர் தொடுத்து வெற்றி பெறுதல் மட்டும் கடமையாகாது. வென்ற நாட்டிலுள்ள மக்களின் நலத்தைப் பேணுதலும் கடமையாகும் என்பதை,

**'நிழல் சேர்ந்தார்க்கு உலையாது காத்து ஓம்பி' (பா.கலி.26.11)**
**'தம் நிழல் சேர்ந்தாரைத்தாங்கி' (பா.கலி.26.15)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். மன்னர் கீழ் வாழும் குடிமக்களும் துன்புறுவர் என்கிறது பாலைக்கலி. மன்னனுக்கும் நாட்டிற்கும் உள்ள தொடர்பு உயிருக்கும் உடம்பிற்கும் உள்ள தொடர்பு போன்றது என்பதனை

**'நெல்லு முயிரன்றே நீருமுயிரன்றே'**
**'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறம்.186)**

என்று புறநானூறு காட்டுகிறது.

**குடிமக்களின் சிறப்பு**

பண்டைக் குடிமக்களின் சிறப்புகள் முல்லைக் கலியும் நெய்தற்கலியும், அகப்பாடல்களின் பின் புலத்தில் நம் கண் முன்னே நிறுத்துகின்றன. நாட்டிற்கு உயிராக விளங்கும் மன்னன் அறநெறி பிறழாது முறை செய்து வாழ்க்கையில் குறிக்கோள் உடையராய் சிறப்புடையவராய்த் திகழ்கின்றனர். குரவைக் கூத்தாடிய ஆயர் மகளிர் தன் அரசன் வெற்றி பெறவேண்டும் என்று வழிபடுகின்ற முறைமை காணப்படுகின்றது. மேலும் அரசனின் ஆட்சி இமயத்துக்கு அப்பாலும் பரவட்டும் என்று திருமாலை வழிபட்ட முறையினை

**“...... நாடுகொண்டு இன்னிசை முரசின் பொருப்பன் மன்னி**
**ஆமைவரால் அருவி ஆர்க்கும்**
**இமையத்து உம்பரும் விளங்குக” (கலி.105:72-75)**

என்ற முல்லைக்கலி வரிகள் இயம்பிச் செல்கின்றன. அரசனுக்கு வேண்டிய இன்றியமையாப் பண்புகளை எடுத்துரைக்கும் பொழுது அன்பு, வாய்மை, நடுவுநிலைமை முதலியன இன்றியமையாதவை என்று கூறப்படுகின்றன. அதே நேரத்தில் அரசனுக்கு மட்டுமன்றி உலகில் வாழும் ஒவ்வொரு குடிமக்களுக்கும் வேண்டிய பண்புகளை நெய்தற்கலி கூறுகிறது. இக்கருத்தையே

**“நயனும் வாய்மையும் நன்னர் நடுவம்**
**இவனின் தோன்றிய இவை” (கலி.103:1-2)**

எனும் அடிகளால் உணரலாம். பண்டையகால குடிமக்கள் வாழ்வில் அரச வாழ்த்து என்பது முக்கிய இடம் பெறுகிறது என உணரலாம். அவர்கள் பின்பற்றி வந்த முறையையும் சிறந்த பண்புகளை உடையவர்களாகவும் வாழ்ந்து வந்த சிறப்பினையும் அறிய முடிகிறது.

**மக்களின் வாழ்க்கை முறைகள்**

ஒவ்வொரு நாளும் மக்கள் துயிலெழுந்ததில் இருந்து மீண்டும் படுக்கைக்குச் செல்வது வரை பல்வேறு வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகின்றனர். இந்நிகழ்ச்சிகள் யாவும் அவரவர் வாழும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றாற் போல வேறுபடுகின்றன. கலித்தொகை, மக்களின் நாள்முறை வாழ்க்கை குறித்து பல செய்திகளை இயம்பிச் செல்கின்றது. பெண்கள் நீண்ட ஒற்றை ஆடையை நிலத்தைத் தொடும்படியாக உடுத்திய பாங்கினை நெய்தற்கலி,

**"சாந்து உயர்கூழை முடியாநிலம் தாழ்ந்த**
**பூங்கரை நிலம் தழீஇ தளர்புஒல்கி**
**பாங்கு அருங்கானத்த ஒளி" (கலி.115:13-15)**

என்ற அடிகள் மூலம் உணரலாம். தொய்யில் எழுதும் முறைமையை தங்களது வாழ்க்கை முறைசாரார் இன்றியமையா நிகழ்வாகக் கருதினர். இதனை

**"நெய்தல் நெறிக்கவும் வல்லன் நெடுமென் தோள்**
**பெய்கரும்பு ஈர்க்கவும் வல்லன் இளமுலைமேல்**
**தொய்யில் எழுதவும் வல்லன்" (கலி.143:31-33)**

எனும் அடியால் உணரலாம்.

**தொழில்கள்**

ஐவகை நிலத்திற்கேற்றாற்போல் மக்கள் தங்கள் தொழிலினை செய்து வந்தனர். மக்கள் தங்கள் குலத்திற்கு ஏற்ப தத்தம் வாழ்க்கைத் தொழில்களுக்கு வேணடிய துணைக் கருவிகளைச் செய்து தரும் பணியில் ஈடுபட்டனர். மூங்கில், நார், கோரை முதலியவற்றால் கூடை, முறம், கட்டில் முதலியன அமைக்கும் தொழிலாளர்களும் இருந்தனர்.

ஓலைகளால் பெட்டி புனைதல், கட்டடத்தொழில், சலவைத் தொழில், தோற்பைகள் செய்தல், தச்சுத்தொழில், மோர்விற்றல், வெண்ணெய்விற்றல், தினைப்புனம் காத்தல், வழிப்பறி செய்தல், நகைதொழில் செய்தல் போன்ற தொழில்களை மக்கள் மேற்கொண்டனர் என்பதை கலித்தொகை வழி அறியலாம்.

**திருமணம்**

சங்ககாலத் திருமணம் சாதி, மத வேறுபாடுகளற்ற திருமணமாக இருந்துள்ளது. திருமணத்திற்கென்று சடங்குகளும், சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. சமூக வாழ்க்கையில் அமைதியும் ஒழுங்கையும் ஏற்படுத்துவதற்காகக் கணவன் மனைவியாக வாழ விரும்பும் ஆணும், பெண்ணும் பலர் அறியத் திருமணச்சடங்கை அமைத்தார்கள் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல்.கற்பு.1091)**

பெண் ஓர் ஆடவன்பால் அன்புடையவளாக இருப்பது தெரியவந்தால் அது தெய்வத்தின் செயல் என கருதி அவள் விரும்பியவனுக்கே மணம் முடித்தனர் என்பதை

**"தெய்வமால் காட்டிற்று இவட்கு என நின்ன அப்**
**பொய்இல் பொதுவற்கு அடை சூழ்ந்தார் தந்தையொடு**
**ஐயன்மார் எல்லாம் ஒருங்கு" (கலி.107:32-34)**

என்று கலித்தொகைக் காட்டுகிறது. இதில் காந்தர்வ மனமே சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

**கலைகள்**

பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் சமூக நிலைகளையும் காணும் பொழுது தமிழ் இனத்தார் மேம்பட்டு விளங்கிய இனத்தார் என்பது புலப்படுகின்றது. உழைப்பிற்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுத்தனரோ அதனைப் போன்று இசை, கூத்து, ஓவியம், கட்டிடக்கலை போன்ற இன்பக் கலைகளுக்கும் முதன்மை கொடுத்து ஆதரித்தனர் என்பதை கலித்தொகையில் காணலாம்.

**பழக்கவழக்கங்கள்**

தொடி, குழை, சிலம்பு முதலிய பலவகை அணிகலன்களைப் பூண்டு அழகு செய்யும் பழக்கம் அக்காலத்திலேயே இருந்திருக்கின்றது என்பதை

**"ஒருத்தி செயலமை கோதை நகை**
**ஒருத்தி இயலார் செருவில் தொடியொடு தட்ப**
**ஒருத்தி தெரிமுத்தம் சேர்ந்த திலகம்**
**ஒருத்தி அரிமாண் அவரிகுழை ஆய்காதுவாங்க**
**ஒருத்தி வரியார் அகல் அல்குல் காழகம்**
**ஒருத்தி அறியார் நெகிழத்து அணி சுறாத் தட்ப" (கலி.92:33-38)**

இவ்வடிகள் குறிப்பிடுகின்றன. பெண்கள் தங்கள் கூந்தலை ஐந்து வகையாக அழகு செய்து கொள்வர். அதனால் அவர்கள் கூந்தலுக்கு பொதுப்பெயராக ஐம்பால் என்று வழங்கும் வழக்கம் இருந்தது என்பதை,

**"எ.்.கு இடைதொட்ட கார்க்கவின் பெற்ற ஐம்பால் போல்" (கலி.32:1)**

எனும் கலித்தொகை அடிகளால் அறியலாம். பெண்கள் தங்கள் நெற்றியில் திலகம் இட்டுக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். தலைவி தனக்கு இவ்வுலகமே கிடைப்பதாக இருந்தாலும் தான் விரும்பிய ஆடவனே அன்றி பிறரை மணக்கும் வழக்கம் கிடையாது என்பதை,

**"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆய மகளிர்க்கு**
**இரு மணம் கூடுதல் இல் இயல்பு அன்றே" (கலி.114:19-21)**

எனும் அடிகள் உணர்த்துகின்றன. விரும்பிய காதலியை முறைப்படி மணந்துகொள்ள இயலாத நிலையில் தலைவன் மடலேறும் வழக்கமும் உண்டு. இதனை,

**"ஓஓ கடலே ஊர்தலைக் கொண்டு கனலும் கருந்தீயுள்**
**நீர் பெய்தக்காலே சினம் தணியும், மற்று இ.்.தோ**
**ஈரம் இல் கேள்வன் உறீஇய காமத்தீ**
**நீருள் புகினும் சுடும்" (கலி.144:59-62)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன. கலித்தொகை குறிப்பிடும் வேறு சில பழக்க வழக்கம் கடன் வாங்குதலும் கொடுத்தலும் (கலி.22:1-3) கல்வி கற்றுத்தந்த குருவிற்குக் காணிக்கை அளித்தலும் (கலி.149:4-5) நோய்கண்டு வாடிய மக்களுக்கு நல்விருந்து அளித்து குணப்படுத்தும் மருத்துவன் மாண்பு (கலி.17:19-20) என்ற பாடல்களில் காணப்படுகின்றன.

**விழாவும் சடங்குமுறைகளும்**

மக்களின் வாழ்வில் சோர்வினைப் போக்கி இன்பமும் மலர்ச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்படுத்துவன. திருவிழாக்கள் மனித இனத்தை ஒன்றுபடுத்தி மகிழ்ச்சியில் ஆழ்த்துவதே விழாக்களின் சிறபம்சமாகும். கலித்தொகையில் தெய்வவழிபாடு விழாக்களும் திருமணச் சடங்கு முறைகளும் இனிதே அமைந்திருப்பதைக் காணலாம்.

**"ஆலமர் செல்வன் அணிசால் மகன்விழாக்**
**கால்கோளென் தூக்கிக்கதுமென நோக்கி" (கலி.83:14-15)**

தெய்வத்தைத் தொழுது, திருவிழாக் கொண்டாடி மகிழ்தல் போன்ற நிகழ்வைக் கலித்தொகை படம்பிடித்துக்காட்டுகின்றது. இதனை,

**"நறையொடு துகள்எழ நல்லவர் அணிநிற்பத்**
**துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்" (கலி.101:12-13)**

இவ்வடிகள் சுட்டுகின்றன. மேலும், இளவேனில் காலம் மன்மதனுக்கு உரிய காலமாகும். இக்காலத்தில் மன்மதனுக்கு விழா எடுக்கும் பழக்கமும் இருந்துள்ளது. காமன் விழாவில் தலைவன் பரத்தையோடு விளையாடி மகிழ்தலும் உண்டு. இதனை இக்காலச் சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ளது. என்பதனை,

**“உறல் யாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்**
**விறல் இழையவரோடு விளையாடுவான் மன்னே”** **(பா.கலி.30:13-14)**

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

**முடிவுரை**

சமூக வாழ்வினை படம் பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாகக் கலித்தொகை விளங்குகிறது. அக்கால மக்களின் வாழ்வையும் அவர்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துரைப்பதில் ஈடு இணையற்ற இலக்கியமாகத் திகழ்கிறது. இவ்வியலக்கியங்களைக் கற்போர் என்றென்றும் இலக்கிய இன்பத்தைப் பெறும் முறையில் அமைவதோடு மட்டுமல்லாமல் காலத்தால் என்றென்றும் அழியாத கருத்துக் கருவூலமாகவும் இவ்விலக்கியம் திகழ்கிறது. இத்தகைய இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் கருத்துக்கள் செறிவுடையன.